[1970 செப்டம்பர் 7

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: (அ) & (இ) ஊராட்சி கல்வி நிதி நிலை தகவல் குழு என்ற ஓர் குழுவினை அரசு அமைத்துள்ளது. இக் குழுவின் விவரமான அறிக்கை வரப்பெற்றபின் ஊராட்சி ஒன்றியங்களுக்கு கல்வி மான்யக் குழு உதவி அளிப்பது பற்றி பரிசிக்கப்படும்.

திரு. டி. மார்டின்: பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மூன்று ஆண்டு காலமாக அநேக ஊராட்சி ஒன்றியங்கள் நிதி பற்றுக்குறை காரணமாக, ஆசிரியர்களுக்கு காலாகாலத்தில் சம்பளங்களை வழங்க முடியாத நிலை இருப்ப தால், அந்தக் குழு அமைக்கப்பட்டது. அது இன்னும் அறிக்கை தரவில்லை. அதே நேரத்தில் ஏராளமான பஞ்சாயத்து யூனியன்கள் ஆசிரியர்களுக்கு சம்பளம் கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறார்களே. அதைப் பரிசிலனை செய்து, அவர்களிடம் ஒரு இன்டரிம் ரிப்போர்ட் வாங்கி ஆசிரியர்களுக்கு சம்பளம் கொடுக்க அரசு முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: 6—8—1969-ல் தான் அந்தக் குழு அமைக்கப்பட்டது. குழுவேலைகளை முடித்து விட்டதாக தகவல் இருக் கிறது. அவர்களுடைய அறிக்கை இன்னும் சில தினங்களில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம். திருநெல்வேலி, இராமநாதபுரம் போன்ற மாவட்டங்கள் பின்தங்கிய மாவட்டங்கள், அங்கே ஊராட்சி ஒன்றியங் களுக்கு நிதிப் பற்றுக்குறை என்று முறையிடு வருகிறது. அங்கே பணம் வழங்க ஏற்பாடு செய்யப்படுகிறது. கனம் உறுப்பினர் கூறும் குறை இருந்து வருவதை விரைவில் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. பி. துரைராஜ்: தலைவர் அவர்களே, திருநெல்வேலி சங்கரன்கோவில் ஊராட்சி ஒன்றியத்தில் பற்றுக்குறை அடிக்கடி ஏற்படுகிறது. குழுவின் இறுதி யான அறிக்கை வருவதற்குள்ளாக, இடைக்கால நிவாரணமாக முன் பணம் கொடுத்து நிலைமைகளை சமாளிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: அப்படி எந்த ஊராட்சி ஒன்றியத் திற்காவது பணத்தட்டுப்பாடு என்று, வழிவகை முன்பணம் கேட்டால், அது கொடுக்கப்படுகிறது. சங்கரன்கோவிலிலிருந்து அப்படி கோரிக்கை வந்தால் அது உடனடியாகக் கவனிக்கப்படும்.

திரு. டி. மார்டின்: பேரவைத்தலைவர் அவர்களே, இந்த மாதத்திலேயே சாத்தான்குளம், உடன்குடி ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள் சம்பளம் கொடுக்கப்படாமல் இருக்கிறார்களே? அவர்களுக்கு உடனடியாக சம்பளம் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: இந்தத் தகவலை மாண்புமிகு உறுப் பினர் ஏற்கனவே என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருந்தால், இந் நேரம் பரிகாரம் கண்டிருக்கலாம். உடனடியாக அதைக் குறித்துக் கொடுப் பார்களானால் தக்க நடவடிக்கை எடுக்கலாம்.

கொளகட்டூர் கூட்டுறவு கடனுதவிச் சங்கம்.

* 284 வினா.—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டத்தில் கொளகட்டூர் கூட்டுறவு கடனுதவி சங்கத்தில் மோசடி செய்ததாக கூட்டுறவு இன்ஸ்பெக்டர்கள் உள்பட பலர் மீது டெபுடி கூட்டுறவு ரிஜிஸ்ட்ரார் 1969 நவம்பரில் புகார் செய்துள்ளாரா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

1970 செப்டம்பர் 7]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: (அ) & (இ) இன்ஸ்பெக்டர்கள் ஆறு பேர்கள் உட்பட, 11 பேர்கள் கொளகட்டூர் பலநோக்க கூட்டுறவுச் சங்கத்தின் நிதியை ரூ. 35,019 கையாடல் செய்திருப்பதாகக் கணக்குத் தணிக்கை செய்யப்பட்டபோது கண்டுபிடிக்கப்பட்டது. மேல் நடவடிக்கைக்கு, காவல் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, தவறு செய்கிறவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க அரசு முயற்சிக்குமா? இம்மாதிரி மற்ற இடங்களில் கூட்டுறவு சங்கங்களில் நடந்தால் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தலைவர் அவர்களே, குற்றம் கண்ட இடத்தில் இந்த அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கும். சற்று கால தாமதம் ஆகிறது என்பது உண்மை. இதற்காக, கூட்டுறவுச் சங்கங்களில் கண்டுபிடிக்கப்படும் குற்றங்களை மேல் நடவடிக்கை எடுக்க காவல் துறையின் தனிப்பகுதியை விரிவுபடுத்த வேண்டும் என்கின்ற செயற்குறிப்பு ஆய்வில் உள்ளது.

வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கம், கடலூர்

*285 வினா.—**திரு. சி. கோவிந்தராஜன்:** மாண்புமிகு அறநிலைய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கடலூரிலுள்ள வீடு கட்டும் கூட்டுறவு நிறுவனத்தில் பணம் கையாடல் செய்யப்பட்டதாக அதன் முன்னாள் தலைவர் மற்றும் இருவர் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: ஆம்.

திரு. சி. கோவிந்தராஜன்: இந்த வழக்கின் நிலை எப்படி உள்ளது? என்னென்ன குற்றச்சாட்டுகள் மீது வழக்கு தொடரப்பட்டது?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: தலைவர் அவர்களே, இந்த கூட்டுறவுச் சங்க முன்னாள் அதிகாரிகளான, சுப்பராயுலு ரெட்டியார் என்பவர் ரூ. 500 மோசடி செய்ததாகவும், 409 ஐ.பி.சி. செக்ஷன்படி வழக்குத் தொடரப்பட்டதாகவும், பானுகுமார் நயினர் என்பவர் ரூ. 405 மோசடி செய்ததாகவும், அவர்மீது ஐ.பி.சி. 408-ன் கீழ் கேஸ் போடப்பட்டதாகவும், ஏ. 3, சந்தானம் என்பவர் ரூ. 225 மோசடி செய்ததற்கு ஐ.பி.சி. 408-ல் கேஸ் போடப்பட்டதாகவும், அந்தக் கேஸுகளில், சந்தானம், சுப்பராயுலு ரெட்டியார் இருவர் மீதும் போடப்பட்ட கேசில் கோர்ட்டில் விடுதலை அளிக்கப்பட்டதாகவும், பானுகுமார் நயினர் இறந்துவிட்டதாகவும் தகவல் இருக்கிறது.

திரு. சி. கோவிந்தராசன்: பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வழக்கு இன்னும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறதா? அவர்கள் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்களே, எந்த அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள்? குற்றமே இல்லையென்று கருதி அவர்கள் விடுதலை செய்யப்பட்டார்களா?